# 8 - ஆவது சான்றோர் (SC) மாநில குடியமர்வு

## 22, 23 ஆகஸ்ட், 2022

## தியான ஆசிரமம், சாந்தோம், சென்னை - 28

### முதல் நாள்: 22.09.2022

ஆண்டுதோறும் நடைபெற கூடிய சான்றோர்களுக்கான மாநில குடியமர்வு கடந்த ஆகஸ்ட் 22, 23 அன்று சமூக கண்காணிப்பகம், பாலம், அகம் மற்றும் ஆக்சன் எய்ட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து சென்னை, தியான ஆசிரமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு பல சான்றோர் அமைப்புகளில் இருந்தும், நிறுவனங்கள் மற்றும் கட்சிகளில் இருந்தும் கலந்து கொண்டு சிறப்பித்து வழிநடத்தினர். திரு.கிருத்துதாசு காந்தி இ.அ.ப (ஓய்வு) மற்றும் அருட்பணி. ஜான் குமார் அவர்களின் முன்னிலையில் இரண்டு நாள் குடியமர்வு நடத்தப்பட்டது. இந்த குடியமர்வின் மூலம் சான்றோர்களின் மீதான ஒடுக்கப்பட்ட பார்வை, தாழ்த்தப்பட்ட சிந்தனை போன்றவை ஒழிக்கப்பட்டு மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையுடன் தொடங்கப்பட்டது.

அருட்பணி. ஜான் குமார் அவர்களின் வரவேற்புரையுடன்,

திரு. கிருத்துதாசு காந்தி இ.அ.ப (ஓய்வு) அவர்களின் நவீன வீடு எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்ற நவீன கருத்தை வைத்து உரையாடலைத் தொடங்கினார்.

பட்டியலின சமுதாயம் எப்படி முன்னேறி உள்ளது - தற்சார்பு (மக்களாக) முன்னேற்றம் மற்றும் மத்திய, மாநில அரசின் முன்னேற்றப் பணிகள் அல்லது திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது.

- விழிப்புணர்வு, தீண்டாமை சுவர் ஒழிப்பு, மக்களின் முன்னேற்ற நாட்டம், மக்கள் கூட்டமைப்பு (people's movements), உரிமைப் பற்றிய கேள்விகள், பெண்கள் குழுக்கள், தலித் அமைப்புகள், தனிமனித முன்னேற்றம் மற்றும் கல்வி போன்றவை தற்சார்பு முன்னேற்றங்களாக பேசப்பட்டவை.
- இட ஓதுக்கீடு, உயர்கல்விக்கு உதவி, பிரதமர் வீடு வழங்கும் திட்டம், அயல்நாட்டுக் கல்வித் தொகை, அரசு கல்விக் கொடை, சமூக நலத்துறை வழியாக தன்னார்வு நிறுவனங்களைப் பட்டியலினத்தவர் தொடங்கி நடத்த நிதியுதவி மற்றும் தேசியப் பட்டியல் இனத்தோர் நல ஆணையம் போன்றவை மத்திய, மாநில அரசின் முன்னேற்றப் பணிகளாக பேசப்பட்டவை.

### பட்டியலின (சான்றோர்க்கான) வளர்ச்சி மேம்பாட்டிற்கான செயல்திட்டங்கள் சிறப்புக் கூறுத்திட்டம்:

- 1980 முதல் 1997 வரை நிதி ஒதுக்கவில்லை.
- வேளாண்துறையில் திட்டங்கள்
- கால்நடைத் துறை வழியாக முன்னேற்றத் திட்டங்கள்
- நர்சரி உருவாக்க நிதி ஒதுக்கீடு

## சான்றோர்களும் வேளாண்மையும்:

- சான்றோர்களுக்கு வேளாண் திட்டத்தின் கீழ் 1300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் வேளாண் செய்ய நிலங்கள் இல்லாத அதிகபட்ச சான்றோர்களால் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற முடியவில்லை.
- சான்றோர் சிறு-குறு விவசாயிகள் பற்றியப் புள்ளிவிவரம் அரசுத் தரப்பில் இல்லை.

## போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை:

- திரு. சந்திரமோகன் அவர்கள் போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை பற்றியும் அதில் சான்றோர்களின் பங்கு மற்றும் பயன்பாட்டை பற்றியும் எடுத்துரைத்தார்.
- சான்றோர் கல்வி மேம்பாடு - புள்ளிவிவரம், 2015-16 தொடங்கி இதுவரை, 2021-21 (1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்புவரை)
- கல்விக்கொடை கற்கைக் கட்டணம், பேணல் கட்டணம், புத்தக வங்கி ஆகியவற்றை 8 லட்சம் சான்றோர் மாணாக்கர் இக்கல்விக்கொடை பெற்று படித்து வருகிறார்கள்.
- கலை மற்றும் அறிவியல் பிறிவுகளின் கீழ் ஒதுக்கப்படும் கல்விக்கொடை உயர்த்தப்பட வேண்டும்.

## அயல்நாட்டுக் கல்விக்கொடை:

- இந்தப் பயனுள்ள புதிய திட்டத்தை கொண்டு வந்ததற்காக தமிழக அரசிற்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது. இதுவரை அளிக்கப்பட்ட அனைத்து சான்றோர்களின் விண்ணபத்திற்கும் மானியம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

## சான்றோர்க்கான 5% இட ஒதுக்கீடு:

- திரு. நவநீத சிவக்குமார் அவர்கள் சான்றோர்களுக்கான 5% இடஒதுக்கீடு பற்றியும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் சான்றோர்களின் பயன் குறித்தும் விளக்கினார்.
- கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் போடப்பட்ட இத்திட்டத்தை துவக்கியதற்கு பாராட்டுக்களும், விரைவில் உத்தரவு பிறப்பிக்க கோரிக்கையும் விடுக்கப்பட்டது.

## அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்கள்

### I. அனைத்திந்திய திராவிட மக்கள் கட்சி - திரு. கருப்பையா

- ஒதுக்கீடு பாராளுமன்றம், சட்ட மன்றம் மற்றும் பஞ்சாயத்துகளில் உண்டு. அதைப் போன்று கட்சிகளின் உள் கட்டமைப்பில் ஒதுக்கீட்டை கொண்டுவர வேண்டும். அதற்கு நாங்கள் பொதுத் தளத்தில் போராடுவோம்.
- சான்றோர்க்கான வேளாண் நிலங்களைக் கணக்கெடுப்பு செய்ய வேண்டும்.
- அரசியல் கட்சியளின் பணிகளை மக்களின் வளர்ச்சிக்காக பயன்படுத்துதல்

### II. காங்கிரசு - திரு. M.P. ரஞ்சன் குமார்

- கல்விக்குச் செலவிட முடியாதவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட வேண்டும்.

- தமிழ்நாட்டிலுள்ள 72 மாவட்டத் தலைவர்களில் தற்போது 9 சான்றோர் (SC) உள்ளனர்.
- நிலங்களை சான்றோர்க்கு கொண்டு சேர்க்க வேண்டும். குடியருப்பு, பசுமைத் திட்டங்கள் மக்களுக்கு முழுமையாக சேர வேண்டும்.

**III. இந்திய மார்க்சிஸ்ட் பொது உடைமைக் கட்சி - திருமதி. கிருஷ்ணவேணி**

- சான்றோர்க்குக் கட்சிகளில் ஆளுமைப் பதவிகள் தரப்பட வேண்டுவது இன்றியமையாதது என்பதை உணர்ந்து CPM தற்போது அப்பணியில் இறங்கி உள்ளது.
- புதிய முன்னேற்றத் திட்டங்களை உருவாக்குதல்
- பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகப்படுத்துதல் (Women Dalit Representation)
- 'தீண்டாமை ஒழிப்பு முன்னணி' என்பதன் பெயரை 'வன்கொடுமை ஒழிப்பு முன்னணி' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது. இது பற்றி ஆலோசிக்கப்படும் என்றார்.

**IV. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி - திரு. சிவா**

- சாதியக் கட்டமைப்பு ஒழிக்கப் பட வேண்டும்.
- அரசியல் சாசன சட்டத்தின் உரிமைகளை வைத்து சான்றோர் உரிமையை நிலை நாட்ட வேண்டும்.
- அனைத்து அரசியல் செயல்களிலும் பெண்களுக்கு 15% முன்னுரிமை.
- தலித் உரிமைகள் முன்னணி மூலமாகச் சான்றோர் வளர்ச்சித் திட்டங்களுக்கு (DAPSC) தனிச்சட்டம் இயற்ற வேண்டும் என்ற கோரிக்கையை மாநிலங்களிடம் கட்சி வலியுறுத்தி வருகிறது.

**V. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி - திரு. வீரபாண்டியன்**

- சான்றோர் என்ற சொல் புதுச் சிந்தாந்தம் என்றும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் வலியுறுத்தினார்.
- சான்றோராகிய பட்டியல் இனத்தவர் சாதியை உள்வாங்காதவர் என்பதால் அனைத்து விழுமியங்களும் அவர்களிடம் இருந்தே வந்துள்ளன.
- தமிழ்நாடு CPI கட்சியில் உள்ள சற்றொப்ப 400 ஒன்றியச் செயலாளர்களில் 95 சான்றோர்கள் (SC) உள்ளனர்.

**VI. பகுசன் சமாஜ் கட்சி (BSP) - திரு. மோகன்**

- வேலை வாய்ப்பில் வளர்ச்சி என்பது மிக அவசியம் என்றும், சான்றோர்களுக்கு நேரடியாக வங்கிக் கடன்பெற வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.
- பொருளாதாரத்திலும், கல்வியிலும் நிமிர்ந்தவர்களை யாரும் சீண்ட முடியாது, ஆகவே சான்றோர்க்கான அணுகு முறையில் இவை இரண்டும் இரு கண்களைப் போன்றன.
- இன்று திரண்டதுபோல் பல்வேறு கட்சிகளின் சார்பாளர்கள் சான்றோர்க்கான (SC) செயல்பாடுகளைச் சிந்திக்க அணியாகத் திரண்டு அவ்வப்போது கூடிப் பேசவேண்டும்.

## 8 - ஆவது சான்றோர் (SC) மாநில குடியமர்வு

**இரண்டாம் நாள்: 23.09.2022**

### சான்றோர்களுக்கான சிறப்புக் கூறுத் திட்டம்: (Scheduled Castes - Sub plan)

அருட்பணி. ஜான் குமார் அவர்கள் சான்றோர்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டங்களுக்கான திட்டமிடல் பற்றியப் பின்வரும் கருத்துருக்களை எடுத்துரைத்தார்:

- இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சான்றோர்களும் ஒரே மாதிரி இல்லை, மாவட்டந்தோறும் வித்தியாசப்படுவார்கள். ஆகவே, எல்லோருக்கும் ஒரே மாதிரியான திட்டம் வகுக்க முடியாது. அவர்கள் வாழும் இடம், சூழ்நிலை, மாற்றம் போன்றவற்றை ஆராய்ந்து திட்டங்கள் மற்றும் கொள்கைகள் வரையறுக்கப்பட வேண்டும்.
- முன்னேற்றம், மேம்பாடு, வளர்ச்சி, திட்டமிடல் ஆகியவற்றிற்கு அடிப்படை புள்ளிவிவரங்கள்.
- மக்களின் தேவைகள் மற்றும் வாழ்வாதாரத்தை இணைக்காமல் திட்டமிடல் நடந்துகொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக சான்றோர் மக்களை தாங்கள் வசிக்கும் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு குடிபெயர்த்தல் (Resettlement Houses)
- நகர்புற மையத்தில் தம்மை தகவமைத்துக் கொள்ளும் சான்றோரின் நிலையைச் சுட்டிக்காட்டினார்.
- திட்டமிடலானது மக்களின் பங்கேற்புடன், சான்றோர்களின் உரிமைப் பற்றியப் பரிந்துரைகளுடன், தேவைகளின் முக்கியத்துவத்துடன் வரையறுக்கப்பட வேண்டும்.
- தொழில் முன்னேற்றங்களுக்கான சிறப்புத் திட்டங்களை உருவாக்கல். சான்றோர்களின் திறனை அறிந்து அவர்களுக்கு பயிற்சி அளித்து அதன் மூலம் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சியை உருவாக்குதல்.

**திரு. சுதர்சன் அவர்கள் தமிழக கல்விக் கொள்கைக்கான பரிந்துரைகளை எடுத்துரைத்தார்.**

- அனைத்து மாவட்ட நிர்வாகமும் முன் ஆரம்பக் கல்வி நிலையை(Pre-Primary Education) உறுதி செய்ய வேண்டும்.
- சான்றோர் மற்றும் ஆன்றோர்களுக்கான சிறப்பக் கல்வித் திட்டங்கள்.
- சமூதாயத்தால் விலக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பிரத்யேக அணுகுமுறைகளை வலியுறுத்துதல்.
- வீடு கல்வி கற்பதற்கு உகந்த சூழலோடு இருக்க வேண்டும்.
- சான்றோர், ஆன்றோர்கள் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பள்ளியில் சேர்க்கப்பட கூடாது. ஒரு வகுப்பிலிருந்து தேர்ச்சிபெற்று மேல் வகுப்பிற்கு செல்லும் அனைத்து சான்றோர், ஆன்றோர் மாணவ மாணவிகளுக்கு 100% கல்வி வாய்ப்பு வழங்க வேண்டும்.
- சான்றோர்களுக்கு தனிப்பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும். (Excluded people should have Exclusive Schemes)
- பள்ளிகளை நிர்வாகம் செய்ய சான்றோர் நிர்வாகிகளை நியமிக்கவேண்டும்.
- சான்றோர் ஆளுமைகளை, உடைமைகளை, சொத்துக்களை உருவாக்கத் திட்டங்கள் பிறப்பித்தல்.

**திரு. வடகறை வெங்கடேசன் அவர்கள் பின்வரும் கருத்துக்களை எடுத்துறைத்தார்:**

- 70% சான்றோர் மாணவ மாணவிகள் தற்போது கல்லூரியில் பயின்று வருகின்றனர்.
- சான்றோர்கள் சார்ந்த பணியிடங்களில், அலுவலகங்களில் மற்றும் முன்னேற்றத் திட்டங்களில் சான்றோர்களை மட்டுமே அமர்த்த வேண்டும்.
- புதிய பணியிடங்களை உருவாக்குதல், கல்வித்துறைக்கென்று தனி அதிகாரி
- ஆதிதிராவிடர் நலத்துறைக்கென தனி கலை, அறிவியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகள்.
- மையநீரோட்டம் (Mainstreaming) போன்ற வலைகளில் சான்றோர்கள் மாட்டிக் கொள்ளக் கூடாது.

**திரு. கிருத்துதாசு காந்தி அவர்கள் வீட்டு வசதித் திட்டங்கள் குறித்து விளக்கினார்:**

- சான்றோர்களுக்கு நகர்ப்புறங்களில் ‘சமத்துவபுரம்’ மாதிரிகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் தரமாகவும், மதிப்பு மிக்கதாகவும், உடல் மற்றும் சூழலுக்கேற்பவும் கவனமாக திட்டமிடப்பட வேண்டும்.
- சமத்துவபுரம் போன்ற திட்டம் புறம்போக்கு நிலங்களில் இல்லாமல் நெடுஞ்சாலைகளை ஒட்டியப் பகுதிகளில் அமைக்கப்பட வேண்டும்.
- குறைந்தபட்சம் 10 லட்சம் புதிய வீட்டுவசதித் திட்டத்தை சான்றேர்க்கு ஏற்படுத்தித் தர வேண்டும்.
- சான்றோர்களுக்கான கல்லூரி விடுதிகளை மேம்படுத்துதல்.

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) - சீரமைத்தல்:**

- சான்றோர்களுக்கு தொழில் தொடங்குவதற்காக கடனுதவி வழங்குதல். வங்கிகள் பரிசீலித்து ஒப்புதல் அளித்த பின்னரே வங்கிகளால் அனுப்பப்படும் முன்மொழிவுகளை தாட்கோ செயல்படுத்த வேண்டும். திட்டங்களின் சாத்தியக்கூறுகள் அல்லது விண்ணப்பத்தாரரின் உடற்தகுதியன்றி, சான்றோர் ஆன்றோரின் நிலையை சரிபார்த்த பின்னரே மானியத்தை வெளிவிடுவது குறித்து தாட்கோ முடிவெடுக்க வேண்டும்.
- தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகமானது சிறப்பு மத்திய உதவியின் (Special Central Assistance) கூட்டாளியாக செயல்படுவதை நிறுத்த வேண்டும். சிறப்பு மத்திய உதவியின் கனிமமயமாக்கல் முறைக்குள் சிக்கியுள்ளதால் சான்றோர்களுக்கு எந்த உயர்வையும், முன்னேற்றத்தையும் வழங்க முடியவில்லை. இதனால் தொழில் முனைவோர்களை உருவாக்குவதில் பாதிப்பு ஏற்படுகிறது.

மேற்கண்ட அனைத்து கோரிக்கைகளையும் கருத்திற்கொண்டு சான்றோர்களின் முன்னேற்ற மற்றும் வளர்ச்சிக்காக திட்டங்களை உருவாக்க மற்றும் புதுப்பிக்க வேண்டும். சான்றோர்கள் முன்னேற்ற பாதையில் தலை நிமிர்ந்து நடக்க, அவர்களின் கல்வித்தரம், வாழ்வாதாரம், தொழில் வாய்ப்புகள் போன்றவற்றை தமிழக மற்றும் ஒன்றிய அரசு ஏற்படுத்தித் தரவேண்டும். சான்றோர்களுக்கு அளிக்கப்படும் முன்னேற்றத் திட்டங்களை அவர்களின் சலுகைகளாக அறிவிக்காமல் அவர்களின் உரிமைகளாக போற்ற வேண்டும்.

**வாழ்க சான்றோர்... வளர்க தமிழகம்...**

ஆவணம்,

**ப. ராஜேஸ்வரி,**

**சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு.**